RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

* சென்னை * மதுரை

காலை நாளிதழ்

# பாளை. தூய சவேரியார் கல்லூரியில் ஆசிரியர் தினக் கொண்டாட்டம்!

## பேராசிரியர்களுக்கு போட்டிகளை நடத்தி மகிழ்ந்த மாணவர்கள்!




நெல்லை,செப்.08: நெல்லை மாநகரம் பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியரும், 1994ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது பெற்றவரும், முற்போக்கு எழுத்தாளர்கள் பேரவையின் தேசியத் தலைவருமான பொன்னீலன், ஆசிரியர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். வணிகவியல் துறை மூன்றாவது ஆண்டு மாணவி சந்தோஷி வரவேற்றார். கல்லூரியின் செயலர் முனைவர் ஜி.புஷ்பராஜ், கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.மரிய தாஸ், தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் முனைவர் வி.ஹென்றி ஜெரோம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து, ஆசிரியர் தின விழாவில் பேராசிரியர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தி கல்லூரியின் மாணவ மாணவிகள் மகிழ்ந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற பேராசிரியர்களுக்கும், ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆங்கிலத்துறை முதலாம் ஆண்டு மாணவி மகாலட்சுமி நன்றி கூறினார். முதலாம் ஆண்டு பொருளாதாரத் துறை மாணவர் சிவராமசுப்பிரமணியன் மற்றும் முதலாம் ஆண்டு ஆங்கிலத்துறை மாணவி பானுமதி ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை மாணவர் புலத்தலைவர் முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத்தலைவி முனைவர் ஷமீலா ஜோஸ்டர் செய்திருந்தனர்.

அத்வானி, ஜோஷி அமைச்சர்களாகதான் சிறையில் இருந்தனர்

# தனக்கு அதிகாரம் இல்லை என்று 4 மணி நேரத்தில் ஆளுநருக்கு தெரிந்தது




பாளை. சேவியர் கல்லூரியில் நேரு யுவகேந்திரா சார்பில் நடந்த இளையோர் கலைவிழாவை சபாநாயகர் அப்பாவு தொடங்கி வைத்து பேசினார்.

## சபாநாயகர் அப்பாவு பேட்டி

நெல்லை, ஜூலை 1: அமைச்சரை பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்கு உரிமை இல்லை. உணர்ச்சிவசப்பட்டதன் அடிப்படையில் ஆளுநரின் நடவடிக்கை அமைந்ததாக சபாநாயகர் அப்பாவு நெல்லையில் நேற்று தெரிவித்தார்.

நெல்லை நேரு யுவகேந்திரா சார்பில் மாவட்ட அளவிலான இளையோர் கலைவிழா பாளை சேவியர் கல்லூரியில் நடந்தது. இதில் பங்கேற்க வந்த தமிழக சபாநாயகர் அப்பாவு, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் அமைச்சரை பதவி நீக்கம் செய்யும் தகுதி, ஆளுநருக்கு இல்லை. இதை 4 மணி நேரத்திற்குள் ஆளுநர் தெரிந்து கொண்டுள்ளார். ராமர் கோயில் இடிப்பு சம்பவ வழக்கில் தொடர்புடைய முன்னாள் ஒன்றிய அமைச்சர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி போன்றோர் பதவியுடன் தான் நீதிமன்றத்திற்கு சென்றனர். இந்த வழக்கில் அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலிலும் வைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் பதவியில் இருந்து கொண்டு தான் வழக்கை சந்தித்தனர்.

ஆளுநருக்கு உரிமைகள் என்ன என்பது தொடர்பாக உச்சநீதிமன்றம் சமீபத்தில் தெளிவுபடுத்தி உள்ளது. சட்டசபை தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை பதவி பிரமாணம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் உரிமை மட்டும்தான் ஆளுநருக்கு உள்ளது.

யார், யார் அமைச்சர்களாக பதவி ஏற்பார்கள் என்று ஆளுநருக்கு பட்டியல் கொடுத்தால் அதனை ஏற்று ஆளுநர் பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும். அமைச்சர்கள் தானாக பதவி விலகலாம் அல்லது முதலமைச்சர், அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்கலாம். ஆனால் அமைச்சர்களை நீக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு அமைச்சர்களுக்கு 2 ஆண்டுக்கு மேல் தண்டனை உறுதி செய்யப்பட்டால் அமைச்சர்கள் அந்த பதவியில் இருந்து விலக நேரிடும். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, பதவியில் இருந்தபோது தண்டனை கிடைத்ததால் தானாகவே அந்த பதவியில் இருந்து விலகினார். சட்டமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்யும் உரிமை, சபாநாயகருக்கு மட்டுமே உண்டு. ராகுல்காந்தி 2 ஆண்டு தண்டனை பெற்ற நிலையில் அவரது எம்பி பதவியை பாராளுமன்ற சபாநாயகர், பதவி நீக்கம் செய்தார். இது போன்று பல உதாரணங்கள் உள்ளன.

ஆளுநரை நான் பல முறை நேரில் சந்தித்து பேசி உள்ளேன். அவர் மிகவும் நல்ல மனிதர், எளிதில் உணர்ச்சிவசப்படுபவர். நேற்று முன்தினம் நடந்த நடவடிக்கை கூட உணர்ச்சிவசப்பாட்டின் வெளிப்பாடாக இருக்கலாம். சட்டசபை கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த போது ஆளுநர், தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது எழுந்து நின்று மரியாதை செலுத்தாமல் வெளியே சென்றார். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் படியே இந்தியா முழுவதும் ஆட்சி நடந்து வருகிறது. அந்த சட்டத்தின் 159 பிரிவின்படி பதவி பிரமாணம் எடுத்துக்கொண்ட ஆளுநர், மதசார்பற்ற நாடான இந்தியாவை மதசார்புள்ள நாடு என பேசுகிறார்.

ஆளுநர் இந்த பேச்சை தெரிந்து சொல்கிறாரா? தெரியாமல் சொல்கிறாரா? என்று தெரியவில்லை. அவர் இந்த போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

பாத்திமாபீவி ஆளுநராக இருந்தபோது சட்டமன்ற தேர்தலில் போட்டியிட தகுதி இல்லாத நபரை (ஜெயலலிதா) பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த விவகாரம் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்பதற்காக அப்போதைய பிரதமர், ஆளுநரை திரும்ப பெறச் செய்தார். அரசியல் அமைப்பு சட்டத்தின்படி நடந்து கொண்டால் ஆளுநர் தனது பதவிக்கு பெருமை சேர்க்க முடியும்.

இவ்வாறு சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

தென்மாவட்டங்க

# பருவமழை
# 5 கிலோ மிள

விவசாயிகள் வேதனை தீருமா?

வீரவநல்லூர், ஜூலை 1: கண்ணாமூச்சி காட்டி வரும் பருவமழை முறையாக பெய்ய வேண்டி சேரன்மகாதேவி மிளகு பிள்ளையார் கோயிலில் சிறப்பு பூஜை நடந்தது. இதில் 5 கிலோ மிளகை அரைத்து விநாயகருக்கு பூசி, தண்ணீர் தேக்கி வைத்து வழிபட்டனர்.

தென்மாவட்டங்களில் கடந்த ஆண்டு பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவமழையும், இந்த ஆண்டு பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவமழையும் சரிவர பெய்யாமல் தொடர்ந்து ஏமாற்றி வருகிறது. இதனால் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மக்களின் விவசாய தேவைக்கும் முக்கிய ஆதாரமாக விளங்கும் பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைக போதிய நீரின்றி வறண் காணப்படுகின்றன. ஜூன் மாதம் 1ம் தேதி துவங் வேண்டிய தென்மேற் பருவமழை மாதம் முடி பின்பும் துவங்கவில்ல இதனால் கார் சாகுபடி துவங்க முடியாமல் விவச யிகள் தவித்து வருகின்றன

வழக்கமாக ஒவ்வொ ஆண்டும் ஜூன் மாத துவக்கத்திலேயே கா சாகுபடிக்காக அணை ளிலிருந்து தண்ணீர் திறந் விடப்படும். ஆனால் இ ஆண்டு அணைகளி போதிய நீர் இல்லா தால் குடிநீர் தேவை காக மட்டும் குறைந்தள தண்ணீர் ஆற்றில் திறந் விடப்பட்டுள்ளது. இ

ஆனிப் பெருந்திருவிழாவை முன்னிட்டு

# நெல்லையப்பர் கோயிலில் நாளை தேரோட்டம்




# சேவியர் கல்லூரி 101-ம் ஆண்டு தொடக்க விழா

பாளையங்கோட்டையில் பாரம்பரியமிக்க சேவியர்ஸ் கல்லூரியின் 101-ம் ஆண்டு தொடக்க விழா மற்றும் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் மரியதாஸ் வரவேற்று பேசினார். இக்னேஷியஸ் கல்வியியல் கல்லூரி வசந்தி மெடோனா சிறப்புரையாற்றினார். முன்னதாக பாளை மறை மாவட்ட ஆயர் அந்தோணிச்சாமி சிறப்பு இறை வணக்கம் செய்தார். செயலாளர் புஷ்பராஜ் கலைமனைகள் அதிபர் ஹென்றி ஜெரோம் மற்றும் பலர் பேசினர்.

01:10 pm,1st Jul 2023

பாவூர்சத்திரம் அரசு கால்நடை மருந்தக வளாகத்தில் ரூ.72.55 லட்சம் மதிப்பில் நாட்டின நாய்கள் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் கட்டுமானப் பணி தொடங்கியது.

பணிகளை தொடங்கி வைத்து தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் கூறும்போது, "தமிழகத்தில் உள்ள பாரம்பரிய நாட்டின நாய்களான ராஜபாளையம், ...

நாய்கள் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவப்படும் என அறிவித்தது.

அதைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 8.12.2022 அன்று தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில் ...

# நேரு யுவ கேந்திரா இளையோர் கலைவிழா

• திருநெல்வேலி

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் நேருயுவ கேந்திரா இளையோர் கலைவிழாவை தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்தார். உதவி ஆட்சியர் (பயிற்சி) க.கோகுல் முன்னிலை வகித்தார்.

நேருயுவ கேந்திரா சார்பில் நாடு முழுவதும் 766 மாவட்டங்களில் இளைஞர்களின் திறமையை வெளிக் கொணரும் வகையில் மாவட்ட அளவிலான இளையோர் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் நடைபெற்ற கலை விழாவை தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்து பேசியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப் பட்டு 1,200-க்கும் மேற்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் தற்போது 9 தொழிற்சாலைகள் செயல்படுகின்றன.

> "நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 9 தொழிற்சாலைகள் செயல்படுகின்றன."

அங்கு கையுறை தயாரிக்கும் நிறுவனம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் அமைந்தால் இப்பகுதியில் படித்த இளைஞர்கள் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார். அரசின் பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

கல்லூரி செயலர் அருட்தந்தை புஷ்பராஜ், கல்லூரி முதல்வர் அருட்தந்தை மரியதாஸ், கலை மனைகளின் அதிபர் அருட்தந்தை ஹென்றி ஜெரோம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்வாயில் தண்ணீர் திறக்க எதிர்ப்பு

# ...சிகளை கண்டித்து ராதாபுரத்தில் ஆர்ப்பாட்டம்

...மாவட்டம் ...ணையில் இருந்து ...றாறு பட்டணம் ...ண்ணீர் திறந்து



RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

* சென்னை * மதுரை

காலை நாளிதழ்

## 101 – ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் ஆன்மீகப் பணியாளர்களுக்கு பாராட்டுப் பெருவிழா!




நெல்லை,ஜூலை.02: திருநெல்வேலி மாநகரம் பாளையங் கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் படித்த, பணியாற்றிய முன்னாள் ஆன்மீகப் பணியாளர் கள் மற்றும் அருட் தந்தையர்களை கௌர விக்கும் நிகழ்வு கல்லூரி யின் போப் பிரான்சிஸ் அரங்கத்தில் நடை பெற்றது.

பாளையங் கோட்டை கத்தோலிக்க மறை மாவட்ட பேராயர் அருட்தந்தை அந்தோணிசாமி அடிகள் வழிபாட்டு நிகழ்வைத் தொடங்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை முனைவர் சி.மரியதாஸ் வரவேற்றார். தொடர்ந்து தூய சவேரியார் கல்லூரியில் படித்த, பணியாற்றிய ஆன்மீகப் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவர் மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. மாணவர் மன்ற பிரதிநிதிகள் அவர்களுக்கான உறுதி மொழியை எடுத்து மாணவர் மன்ற பொறுப்பில் தங்களை இணைத்துக் கொண்டனர். கல்லூரியின் சுயநிதி பிரிவின் இணை முதல்வர் முனைவர் பெ.சேவியர் இன்னசென்ட் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரிச் செயலர் அருட்தந்தை முனைவர் ஜி.புஷ்பராஜ் மற்றும் தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் அருட்தந்தை முனைவர் வி.ஹென்றி ஜெரோம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். பாளையங்கோட்டை தூய கான்வென்ட் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் எல்.வசந்தி மெடோனா, பாளையங்கோட்டை மறைமாவட்ட பேராயர் முனைவர் எஸ். அந்தோணிசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். முடிவில் மாணவர் புல தலைவர் முனைவர் எஸ்.அலாய் சியஸ் ஆல்பர்ட் நன்றியுரை கூறினார். தொடர்ந்து கல்லூரியின் மாணவ மாணவிகள் பங்கேற்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ுவரை கில் லாரி மோதி படுகாயம் என்று வலியுறுத்தி உடலை நடத்தி வருகின்றனர்.

தான்,
ண் டி
அறிந்
ர் கள்
ாலை
வாறு

லை
பரை
னர்.
டர்ந்து
ணை
னர்.
னிமா
னில்
தால்
ாலை
பை




பாளை சேவியர் கல்லூரியில் 101வது ஆண்டு தொடக்க விழாவில் பாளை மறை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி தலைமையில் சிறப்பு இறைவழிபாடு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் மரியதாஸ் வரவேற்றார். மாணவர் மன்ற தொடக்க விழா நடந்தது. அவர்கள் உறுதிமொழி ஏற்று பொறுப்பேற்றனர். சுயநிதி பிரிவு இணை முதல்வர் சேவியர் இன்னசென்ட், கல்லூரி செயலர் புஷ்பராஜ், சேவியர் கலைமனைகள் அதிபர் ஹென்றி ஜெரோம், இக்னேஷியஸ் கல்வியியல் கல்லூரி முதல்வர் வசந்தி மெடோனா ஆகியோர் பேசினர்.

மாலை பொங்கலிட்டுதல், இரவு அக்கினிச்சட்டி

நடந்தது. சுற்றுப்பகுதி மக்கள் பங்கேற்றனர்.

வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கபைப் லைன் பணிகள் துவக்கி வைத்தல் போன்ற நிகழ்ச் சிகளில் சேர்மன் சேவியர்



■ பாளை சேவியர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் பாடநூல் கழக தலைவர் லியோனி பேசினார்.

# பாளை சேவியர் கல்லூரியில் இஞ்ஞாசியார் நினைவஞ்சலி

**திருநெல்வேலி, ஜூலை 29-**

பாளை சேவியர் கல் லூரியில் இஞ்ஞாசியார் நினைவஞ்சலி நிகழ்ச்சி நடந்தது.

பாளை சேவியர் கல்லூரியில், ஏக சபையை உருவாக் கிய முன்னோடிகளில் ஒருவரான லயோலா இஞ்ஞாசியாருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி சுயநிதி பிரிவு இணை முதல்வர் சேவியர் இன்னசெண்ட் வரவேற்றார். முதல் வர் மரியதாஸ் அடிகள் தலைமை வகித்தார். செயலர் புஷ்பராஜ் அடி கள், வாழ்த்தி பேசினார். முன்னதாக இஞ்ஞாசி யார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ் மற்றும் ஆங்கில பேச்சு போட்டி நடத்தப் பட்டது. சேவியர் ஆய்வக இயக்குனர் இஞ்ஞாசி முத்து அடிகள் எழுதிய 'திருநெல்வேலி மலைக ளின் தாவரங்கள்' என்ற புத்தகம் வெளியிடப் பட்டது. கல்லூரி கலை மனைகளின் அதிபர் ஹென்றி ஜெரோம் ஆசி வழங்கினார். தமிழ்நாடு பாடநூல் கழக தலை வர் லியோனி சிறப்புரை யாற்றினார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டன. மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பேட்டை இ

# சாலை பாது

**பேட்டை, ஜூலை 29-**

பேட்டை ம.தி.தா. இந்து கல்லூரியில் சாலை பாதுகாப்பு கருத்தரங்கு நடந்தது.

பேட்டை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்ட அணியினர் மற்றும் நெல்லை வட்டார போக்குவரத்து அலுவலகமும் இணைந்து சாலை பாதுகாப்பு கருத்தரங்கு நடத்தினர்.

நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் இலக்குவன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக நெல்லை வட்டார போக்குவரத்து அலுவலர் சந்திரசேகரன், நெல்லை போக்குவரத்து காவல்துறை உதவி ஆணையர் காமேஸ்வரன், சாலைப் பாதுகாப்புக்குழு உதவி கோட்ட

அணிகளின் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் சார்பு அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புனித இஞ்ஞாசியாருக்கு நினைவஞ்சலி

● **திருநெல்வேலி**

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் புனித இஞ்ஞாசியாருக்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையொட்டி கல்லூரியின் பிரதான சாலையில் அமைந் துள்ள புனித லயோலா இஞ்ஞாசியாரின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதையடுத்து நடை பெற்ற நிகழ்ச்சியில் கல்லூரியின் சுயநிதி பிரிவின் இணை முதல்வர் பி. சேவியர் இன்னசென்ட் வரவேற்றார். கல்லூரி செயலர் அருட்தந்தை ஜி. புஷ்பராஜ், முதல்வர் அருட்தந்தை எஸ். மரியதாஸ் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ் மற்றும் ஆங்கில பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. 'திருநெல்வேலி மலைகளின் தாவரங்கள்' என்ற ஆய்வு நூலை சவேரியார் ஆய்வு மைய இயக்குநர் அருட்தந்தை எஸ். இஞ்ஞாசிமுத்து வெளியிட்டார். தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் அருட் தந்தை வி. ஹென்றி ஜெரோம் ஆசியுரை வழங்கினார். தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் லியோனி சிறப்புரை ஆற்றினார். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## அரசு ஐடிஐ-களில் நேரடி மாணவர் சேர்க்கை

● **தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ் வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி, வேப்பலோடை, திருச்செந்தூர் மற்றும் நாகலா ... தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களி

RNI.Reg.No.TNTAM/2019/78889

உள்ளாட்சி சாரல்

* சென்னை * மதுரை

காலை நாளிதழ்

## பாளை. சவேரியார் கல்லூரியில்

# புனித இஞ்ஞாசியார் நினைவஞ்சலி: திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு!




**நெல்லை,ஜூலை.29:** நெல்லை மாநகரம், பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் இயேசு சபையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவரான "புனித இலயோலா இஞ்ஞாசியருக்கு" நினைவு அஞ்சலி செலுத்தும் சிறப்பு நிகழ்வு கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்றது.

கணிதத் துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் அருள்ராஜ், புனித இலயோலா இஞ்ஞாசியார் குறித்து பேசினார். கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இணை முதல்வர் முனைவர் பி.சேவியர் இன்னசெண்ட் மற்றும் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் ஜி.புஷ்பராஜ் அடிகளார் மற்றும் கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை முனைவர் எஸ்.மரியதாஸ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாணவிகள் பங்கேற்ற பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது. சவேரியார் ஆய்வு மையத்தின் இயக்குனர் அருட்தந்தை முனைவர் எஸ்.இஞ்ஞாசிமுத்து, "திருநெல்வேலி மலைகளின் தாவரங்கள்" என்னும் ஆய்வுப் புத்தகத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர்தந்தை முனைவர் வி.ஹென்றி ஜெரோம் ஆசிரியுரை வழங்கினார். தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவரும், சிறந்த பட்டிமண்டபப் பேச்சாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி, புனித லயோலா இஞ்ஞாசியாரின் அருட்தொண்டு குறித்து சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை மாணவர்கள் புலத்தலைவர் முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத்தலைவி முனைவர் ஷமீலா ஜோஸ்டர் செய்திருந்தனர்.

28.7.23

# இன்றைய செய்தி

உங்கள் பார்வைக்கு










## பாளை. சவேரியார் கல்லூரியில் புனித இஞ்ஞாசியார் நினைவஞ்சலி: திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு

**நெல்லை,ஜூலை.29:** நெல்லை மாநகரம், பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் இயேசு சபையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவரான "புனித இலயோலா இஞ்ஞாசியருக்கு" நினைவு அஞ்சலி செலுத்தும் சிறப்பு நிகழ்வு கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்றது.

கணிதத் துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் அருள்ராஜ், புனித இலயோலா இஞ்ஞாசியார் குறித்து பேசினார். கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இணை முதல்வர் முனைவர் பி.சேவியர் இன்னசெண்ட் மற்றும் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் ஜி.புஷ்பராஜ் அடிகளார் மற்றும் கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை முனைவர் எஸ்.மரியதாஸ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாணவிகள் பங்கேற்ற பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது. சவேரியார் ஆய்வு மையத்தின் இயக்குனர் அருட்தந்தை முனைவர் எஸ்.இஞ்ஞாசிமுத்து, "திருநெல்வேலி மலைகளின் தாவரங்கள்" என்னும் ஆய்வுப் புத்தகத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர்தந்தை முனைவர் வி.ஹென்றி ஜெரோம் ஆசிரியுரை வழங்கினார். தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவரும், சிறந்த பட்டிமண்டபப் பேச்சாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி, புனித லயோலா இஞ்ஞாசியாரின் அருட்தொண்டு குறித்து சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை மாணவர்கள் புலத்தலைவர் முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத்தலைவி முனைவர் ஷமீலா ஜோஸ்டர் செய்திருந்தனர்.

பாளையில்

# புனித இஞ்ஞாசியர் நினைவஞ்சலி நிகழ்ச்சி

## திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு

நெல்லை, ஜூலை 29: பாளை தூய சவேரியார் கல்லூரியில் புனித இஞ்ஞாசியாருக்கு நினைவஞ்சலி செலுத்தும் விழா நேற்று நடந்தது. இதில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்றார்.



பாளை தூய சவேரியார் கல்லூரியில் நடந்த புனித இஞ்ஞாசியர் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பேசினார்.

பாளையில் உள்ள முன்னோடி கல்வி நிறுவனங்களில் ஒன்றான தூய சவேரியார் கல்லூரியானது, இயேசு சபை நிர்வாகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. உலகமெங்கிலும் கல்விப் பணியை ஆற்றி வரும் இயேசு சபை முன்னோடிகளில் ஒருவரான புனித லயோலா இஞ்ஞாசியருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கல்லூரியில் நேற்று நடந்தது. கல்லூரியின் பிரதான சாலையில் அமைந்துள்ள புனித லயோலா இஞ்ஞாசியாரின் சிலை முன்பு முதல்வர் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

கணிதத்துறையின் மூத்த பேராசிரியர் அருள்ராஜ், புனித லயோலா இஞ்ஞாசியர் பற்றி பேசினார். தொடர்ந்து கல்லூரியின் போப் பிரான்சிஸ் அரங்கத்தில் நடந்த விழாவில் கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இணை முதல்வர் சேவியர் இன்னசென்ட், கல்லூரியின் செயலர் புஷ்பராஜ், கல்லூரி முதல்வர் மரியதாஸ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

விழாவில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று பேசுகையில், "மாணவர்களிடம் கேள்வி கேட்கும் திறன் பெருக வேண்டும். கேள்விகள் கேட்பது சாதாரணமானதல்ல. மேடை பேச்சாற்றலை மாணவர்கள் வளர்த்து கொள்ள வேண்டும். நான் எனது முதல் மேடை பேச்சிலேயே தோல்வியுற்ற போதும், அருட்தந்தையர்கள் கொடுத்த ஊக்கத்தால், பின்னர் திறம்பட பேசி பேச்சாளராக மாறினேன். இன்று சேவியர் கல்லூரி நூற்றாண்டு விழாவில் பேசும் வாய்ப்பினை பெற்றுள்ளேன். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என உலகிற்கே சமத்துவத்தை சொன்ன நம் முன்னோர்கள் வழிநின்று நாம் வாழ்வில் உயரவேண்டும்" என்றார்.

கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ், ஆங்கில பேச்சுப்போட்டிகள் நடந்தன. மேலும் கல்லூரி சவேரியார் ஆய்வு மையத்தின் இயக்குனர் இஞ்ஞாசிமுத்து 'திருநெல்வேலி மலைகளின் தாவரங்கள்' என்ற தலைப்பிலான ஆய்வு புத்தகம் வெளியிட்டார். தாவரவியல் தொடர்பான ஆராய்ச்சிகளை உள்ளடக்கிய இந்நூலில் 10 புதிய தாவர இனங்கள் வெளிகொண்டு வரப்பெற்றுள்ளது. இந்நூல் உருவாக்கத்தில் பங்களித்த ஆய்வு மைய முன்னாள் இயக்குனர் மாணிக்கம், சவேரியார் கலைமனைகளின் அதிபர் ஹென்றி ஜெரோம் ஆகியோர் பேசினர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை மாணவர் புலத் தலைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத் தலைவி ஷமீலா ஜோஸ்டர் ஆகியோர் செய்திருந்தனர்.

# நெல்லை எப்.எக்ஸ்.கல்லூரியில் அப்துல்கலாம் நினைவு தினம்

### மணிப்பூர் மக்களை பாதுகாக்க வலியுறுத்தி

# பாளை சேவியர் கல்லூரியில் கையெழுத்து பிரசாரம்




நெல்லை, ஆக. 5: மணிப்பூர் மாநிலத்தில் நடந்துவரும் வன்முறையைக் கண்டித்தும், அங்குள்ள மக்களை பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட வலியுறுத்தியும் பாளை சேவியர் கல்லூரியில் மாணவர்கள் கையெழுத்து பிரசாரம் மற்றும் விழிப்புணர்வு நாடகம் நடத்தினர்.

மணிப்பூர் மாநிலத்தில் நடந்துவரும் வன்முறையைக் கண்டிக்கும் விதமாகவும், அங்குள்ள மக்களை பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட வலியுறுத்தும் விதமாகவும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து மணிப்பூர் மக்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் வகையிலும் பாளை சேவியர் கல்லூரி வளாகத்தில் நடந்த கையெழுத்து பிரச்சாரத்தையொட்டி அங்கே வைக்கபட்டிருந்த பதாகையில் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் கையெழுத்திட்டனர். இதையடுத்து இதுதொடர்பாக கல்லூரி மாணவர் பேரவை, பெண்கள் அமைப்பு, ஏஐசியுஎப் மாணவ, மாணவியர்கள் ஒன்று சேர்ந்து விழிப்புணர்வு நாடகம் நடத்தினர்.

# பாளையங்கோட்டை, தூய சவேரியார் கல்லூரியில்

# நெல்லை புனித இஞ்சாசியாருக்கு நினைவஞ்சலி செலுத்தும் விழா

நெல்லை,ஜூலை.31

பாளையங்கோட்டையில் உள்ள முன்னோடி கல்வி நிறுவனங்களில் ஒன்றான தூய சவேரியார் கல்லூரியானது, இயேசு சபை நிர்வாகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. இயேசு சபை நிர்வாகமானது, உலகமெங்கிலும் தனது கல்விப்பணியை சிறப்பாக ஆற்றிவருகிறது. குறிப்பாக, தற்போது உலக கத்தோலிக்கத் தலைவராக உள்ள திருத்தந்தை போப் பிரான்சிஸ் இயேசு சபையைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இயேசு சபையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவரான புனித இலயோலா இஞ்சாசியருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கல்லூரியில் வைத்த நடைபெற்றது. கல்லூரியின் பிரதான சாலையில் அமைந்துள்ள புனித இலயோலா இஞ்சாசியாரின் சிலை முன்பு முதலில் மலர் தூவி, நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. கணிதத் துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் அருள்ராஜ், புனித இலயோலா இஞ்சாசியாரைப் பற்றிய சிற்றுரையை மாணவர்களிடம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் போப் பிரான்சிஸ் அரங்கத்தில் வைத்து வருகை நடனம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. வரவேற்புரையை தொடர்ந்து கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இணை முதல்வர் "முனைவர் சேவியர் இன்னசென்ட், செயலர் அருட்தந்தை முனைவர் புஷ்பராஜ், மற்றும் முதல்வர் அருட்தந்தை முனைவர் மரியதாஸ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை நினைவு கூறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பேச்சுப் போட்டிகள் மேடையில் நடத்தப்பட்டன. விழாவின் சிறப்பு வாய்ந்த அம்சமாக புத்தக வெளியீடு நடைபெற்றது. கல்லூரியில் அமைந்துள்ள




சவேரியார் ஆய்வு மையத்தின் இயக்குனராக உள்ள அருட்தந்தை முனைவர் இஞ்சாசிமுத்து, ஆய்வுப் புத்தகம் வெளியிட்டார். திருநெல்வேலி மலைகளின் தாவரங்கள்" என்ற தலைப்பிலான இந்தப்புத்தகம் உலகளவில் தாவரவியல் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. காரணம், உலக தாவரவியலாளர் கூட்டமைப்பின் படி முக்கிய ஆய்வு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த மையத்தின் 25 ஆண்டு காலத்திற்கும் மேற்பட்ட ஆராய்ச்சியின் வெளிப்பாடாக இந்த புத்தகம் அமைந்துள்ளது. இதுவரை கண்டறியப்படாத 10 தாவர வகைகள் பல்லுயிர் மண்டலமாக அறியப்படும் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சவேரியார் ஆய்வு மையத்தால் ஆய்வு செய்யப்பட்டு கண்டறியப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டில் இதுவரை வெளியில் தெரியப்படாத புதிய 10 தாவர இனங்கள் இருப்பதையும் கண்டுபிடித்து வெளிக் கொண்டுள்ளது இந்த ஆய்வு மையம். இந்த ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநராக இருந்த அருள்தந்தை முனைவர் மாணிக்கம், எழுத்தில், பங்களிப்பில் உருவாகி இப்போதைய இயக்குனராக உள்ள அருட்தந்தை முனைவர். இஞ்சாசிமுத்து, மூலமாக வெளியிடப்பட்டுள்ள இந்த புத்தகத்திற்கு காப்புரிமையும் தரப்பட்டுள்ளது என்பது கூடுதல் சிறப்பம்சம். புத்தக வெளியீட்டினைத் தொடர்ந்து தூய சவேரியார் கலைமனைகளின் "அதிபர் அருட்தந்தை முனைவர் ஹென்றி ஜெரோம், ஆசிரியரை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து அருட்தந்தையர்கள் அனைவரும் இணைந்து இயேசு சபையின் சிறப்பு பாடல் ஒன்றை பாடினார்கள். விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள திண்டுக்கல் லியோனி இறுதியாக தனது சிறப்பு விருந்தினர் உரையை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நன்றியுரையைத் விழாவின் ஏற்பாடுகளையும் மாணவர் புலத் தலைவர் "முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட், மற்றும் மாணவியர் புலத் தலைவி "முனைவர் ஷீலா ஜோஸ்டர்" செய்திருந்தனர்.

# பாளை., தூய சவேரியார் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

[illegible]



[illegible]

## கன்னியாகுமரி மாவட்டம்

## ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.287/2023/அ1 நாள்.14.08.2023

[illegible] https://tntenders.gov.in [illegible] E Token / Digital Signature Card [illegible]

/ ஒப்பம் /

செயல் அலுவலர்

ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி

கன்னியாகுமரி மாவட்டம்

நாள்: 18/08/2023




# கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு முகாம்

குடிப்பழக்கம் மற்றும் போதை பழக்கத்திலிருந்து இளைஞர்கள் தங்களை தற்காத்துக் கொள்வது எப்படி என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி பாளையங்கோட்டை, தூய சவேரியார் கல்லூரியில் நடைபெற்றது. அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயபதி, பிராங்கோ, ரெபோகோ ஆகியோர் விழிப்புணர்வு பயிற்சி அளித்தனர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

09:10 pm,17th Aug 2023

# ஆசிரியர்கள் தான் எங்களை உயர்த்தினார்கள்

## சாகித்திய அகாடமி விருதாளர் பொன்னீலன் பேச்சு

நெல்லை, செப். 6: ஆசிரியர்கள் தான் எங்களை உயர்த்தினார்கள் என நெல்லை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் நடந்த ஆசிரியர்கள் தின விழாவில் சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் பேசினார்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. இளங்கலை மாணவி சந்தோஷி வரவேற்றார். கல்லூரி செயலர் புஷ்பராஜ், முதல்வர் மரியதாஸ், தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் ஹென்றி ஜெரோம் ஆசியுரை வழங்கினர். ஆசிரியரும், 1994ம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது பெற்றவரும், முற்போக்கு எழுத்தாளர்கள் பேரவையின் தேசியத் தலைவருமான பொன்னீலன் ஆசிரியர் தின விழாவில் கலந்து கொண்டு பேசியதாவது:

ஆசிரியர்கள் தான் எங்களை உயர்த்தினார்கள், ஆசிரியர்கள் தான் எங்களை முன்னுக்கு கொண்டு வந்தவர்கள். பண்பை சொல்லித் தந்தார்கள். அவர்களை மறக்க முடியாத மனிதர்களாக நினைவு கூர்கிறேன். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர். முதலில் மாதாவாக இருந்து குழந்தையிடம் அன்பு காட்ட வேண்டும். பின்பு தகப்பனாக அரவணைப்பு கொடுக்க வேண்டும். மாதா, பிதா பண்பும் சேர்ந்தால் குருவாக மாறுவார்கள். அவர்கள் உயர்ந்து வளர்ந்து தெய்வமாக மாற வேண்டும். மாணவர்களை அன்போடு வார்ப்பவர்கள் ஆசிரியர்கள், வழிகாட்டுபவர்கள். நீங்களும் அப்படி ஆசிரியர்களாக வர வேண்டும். ஆசிரியர்களாக இருந்த காலத்தில் தான் நான் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தேன். ஆசிரியரை நேசியுங்கள். ஆசிரியரை கொண்டாடுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து ஆசிரியர்களுக்கான போட்டிகள் போப் பிரான்சிஸ் அரங்கத்தில் நடந்தது. இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் தின விழாவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் மாணவர்கள் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்வுகள் அனைத்தையும் முதலாம் ஆண்டு பொருளாதாரத்துறை மாணவர் சிவராமசுப்பிரமணியன் மற்றும் முதலாம் ஆண்டு ஆங்கிலத் துறை மாணவி பானுமதி ஆகியோர் தொகுத்து வழங்கினர். ஆங்கிலத் துறையில் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவி மகாலட்சுமி நன்றி கூறினார்.

விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் மாணவர் புலத் தலைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத்தலைவி ஷமீலா ஜோஸ்டர் ஆகியோர் செய்திருந்தனர்.

ஆஞ்சியோ பிளாஸ்டி தராமன், சுந்தர், டாக்டா துள்ளது.

# பாளையில் ஆசிரியர் தினவிழா

**திருநெல்வேலி, செப். 6–**

பாளை சேவியர் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது.

மாணவி சந்தோஷி வரவேற்றார். முதல்வர் மரியதாஸ் அடிகள் தலைமை வகித்தார். கல்லூரி செயலர் புஷ்பராஜ், சேவியர் கலைமனைகளின் அதிபர் ஹென்றி ஜெரோம் ஆசி வழங்கினர்.

சிறப்பு விருந்தினர், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் பேசுகையில், ''ஆசிரியர்களே சிறந்த வாழ்க்கை வழிகாட்டி. தன்னலமில்லாமல் பணியாற்றும் ஆசிரியர்களிடம் இருந்து, மாணவர்கள், பாடங்கள் மட்டுமின்றி, நல்ல பழக்கவழக்கங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றார்.




■ பாளை சேவியர் கல்லூரியில் நடந்த ஆசிரியர் தின விழாவில், எழுத்தாளர் பொன்னீலனுக்கு, நினைவு பரிசு வழங்கப்பட்டது.

விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை மாணவர் புல தலைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட் மற்றும் மாணவியர் புலத்தலைவி ஷமீலா ஜோஸ்டர் செய்திருந்தனர்.

இப்பகுதியில் சங்க அமைப்பு, கோயில், பள்ளி, கல்லூரி, பொது,

5.9.2023

# இன்றைய செய்தி

## உங்கள் பார்வைக்கு









## திருநெல்வேலி, பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது.

திருநெல்வேலி, செப்டம்பர் 5: பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியரும், 1994-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது பெற்றவரும், முற்போக்கு எழுத்தாளர்கள் பேரவையின் தேசியத் தலைவருமான திரு. பொன்னீலன் அவர்கள் இந்த ஆசிரியர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முன்னதாக இறைவணக்கம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தொடர்ந்து வணிகவியல் துறையில் மூன்றாவது ஆண்டு இளங்கலை படிக்கும் மாணவி செல்வி சந்தோஷி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் *செயலர் அருட்தந்தை முனைவர் G. புஷ்பராஜ், S.J.,* *அடிகளார்* , கல்லூரியின் *முதல்வர் அருட்தந்தை முனைவர் S. மரியதாஸ், S.J., அடிகளார்*, தூய சவேரியார் கலைமனைகளின் **அதிபர் அருட்தந்தை முனைவர் V. ஹென்றி ஜெரோம்,S.J.,* ஆகியோர் வாழ்த்துரையும், ஆசியுரையும் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரையை சாகித்ய அகாடமி விருது பெற்ற திரு பொன்னீலன் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கினார். தொடர்ந்து ஆசிரியர் தின விழாவானதால், ஆசிரியர்களுக்கான போட்டி போப் பிரான்சிஸ் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவின் இறுதியில் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் தின விழாவை ஒட்டி இதற்கு முன் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆங்கிலத் துறையில் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவி செல்வி மகாலட்சுமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது. இறுதியில் மாணவர்கள் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகள் அனைத்தையும் முதலாம் ஆண்டு பொருளாதாரத் துறை மாணவர் சிவராமசுப்பிரமணியன் மற்றும் முதலாம் ஆண்டு ஆங்கிலத்துறை மாணவி செல்வி பானுமதி ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள். விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் மாணவர் *புலத் தலைவர் முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட்* மற்றும் மாணவியர் புலத் தலைவி *முனைவர் ஷமீலா ஜோஸ்டர்* சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆசிரியர் தின விழா




**நெல்லை,செப்.07-**


பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் சுய நிதிப் பிரிவில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. பிரபல எழுத்தாளரும், கதாசிரியருமான நாறும் புநாதன், சிறப்பு விருந்தினராககலந்துகொண்டார். ஆங்கிலத் துறையில் மூன்றாவது ஆண்டு இளங்கலை படிக்கும் மாணவி கல்யாணி (எ) ஜான்சி வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் புஷ்பராஜ், கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை முனைவர் மரியதாஸ், தூய சவேரியார் கலை மனைகளின் அருட்தந்தை முனைவர் ஹென்றி ஜெரோம், ஆகியோர் வாழ்த்துரையும், ஆசியுரையும் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரையை நாறும்பூநாதன், மாணவர்களுக்கு வழங்கினார். தொடர்ந்து ஆசிரியர்களுக்கான போட்டிகள் அரங்கத்தில் மாணவர்களால் நடத்தப்பட்டன. விழாவின் இறுதியில் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் தின விழாவை ஒட்டி இதற்கு முன் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. நிர்வாகவியல் துறையில் இறுதியாண்டு படிக்கும் மாணவர் வினோத் குமார் நன்றியுரை வழங்கினர்.

நவ்இந்தியர் டைம்ஸ்

# ‘மாணவர்களின் வளர்ச்சியில் மனம் மகிழ்பவர்கள் ஆசிரியர்கள்’




ஆசிரியர் தின விழாவில் பரிசு வழங்குகிறார் சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன். உடன், கல்லூரி முதல்வர் மரியதாஸ், செயலர் புஷ்பராஜ் உள்ளிட்டோர்.

திருநெல்வேலி, செப். 5: மாணவர்களின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்பவர்கள் ஆசிரியர்கள் என்றார் சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் அவர் பங்கேற்றுப் பேசியது:

ஆசிரியர் தினத்தில் மாணவர் சமுதாயத்தை சந்தித்து கலந்துரையாட கிடைத்த வாய்ப்பால் மகிழ்கிறேன். நான் சாகித்ய அகாதெமி விருது பெற்றபோது ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அப்போது எனது ஆசிரியர் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்தார். பள்ளிப் பருவத்தில் எனது பெயர் சபாபதி என்பதால் அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. ஆனால், அவரை நேரில் சந்தித்து நான் அடையாளப்படுத்தி சொன்னபோது மிகவும் மகிழ்ந்ததோடு, ஆனந்தக் கண்ணீரோடு வாழ்த்தினார்.

மாணவர்களின் வளர்ச்சியைக் கண்டு ஆசிரியர்கள் மகிழ்கிறார்கள். ஆசிரியர்கள் மாதாவாக அன்பு காட்ட வேண்டும். தந்தை போல அறிவு புகட்ட வேண்டும். அந்த இரு பண்புகளும் வரும் ஒருவர் குருவாக மாறுவார். அதில் சிறப்புற செயல்பட்டால் இறைத்தன்மை வெளிப்பட்டு உலகம் நம்மை கொண்டாடும். இதையே உலகின் சிறந்த பல நூல்கள் சொல்கின்றன. வாத்தியார்- ஆசிரியர் என்பதற்கு வித்தியாசம் உள்ளது. மாணவர்களுக்கு அன்பு கலந்த வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் திகழ வேண்டும். நான் எனது வாழ்நாளில் 6 ஆண்டுகள் ஆசிரியர் பணியில் இருந்தேன். அதுவே மிகவும் சந்தோஷ காலமாகக் கருதுகிறேன். மாணவர் சமுதாயமும் ஆசிரியர்களை நேசிக்க வேண்டும் என்றார் அவர்.

விழாவில் ஜி.சந்தோஷி வரவேற்றார். கல்லூரி முதல்வர் எஸ்.மரியதாஸ் தலைமை வகித்தார். செயலர் ஜி.புஷ்பராஜ், தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் வி.ஹென்றி ஜெரோம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். எம்.மகாலட்சுமி நன்றி கூறினார்.

RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

* சென்னை * மதுரை

காலை நாளிதழ்

## பாளை. தூய சவேரியார் கல்லூரியில்

# ஜனநாயகம் மற்றும் சமூக நீதி விழிப்புணர்வு கருத்தரங்கம்!

## மதுரை “ஆதாரங்கள்” அமைப்பின் கதிர் கருத்துரை!




நெல்லை,செப்.14: நெல்லை மாநகரம், பாளையங்கோட்டை, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில், சவேரியார் கல்லூரியின் மாணவர் மன்றம், கல்லூரி ஜனநாயகப் பேரவை, கல்லூரி தேர்தல் விழிப்புணர்வு அமைப்பு ஆகியவை சார்பில், மதுரை “ஆதாரங்கள் அமைப்பின்” மூலமாக “ஜனநாயகம் மற்றும் சமூக நீதி” தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சி கல்லூரியின் கலையரங்கில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் அருட்தந்தை முனைவர் எஸ்.மரியதாஸ் தலைமை தாங்கினார். மதுரை, ஆதாரங்கள் அமைப்பின் செயல் இயக்குனர் ஏ.கதிர், சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினார். அப்போது பேசிய அவர், சமூக சீர்கேடுகள், சமுதாயத்தின் அவலங்கள், இந்திய நாடு சந்திக்கும் பிரச்சனைகள் மற்றும் அதனை தடுக்க மாணவர்கள் சமுதாயம் செய்ய வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

விழா ஏற்பாடுகளை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் மாணவர் புலத்தலைவர் முனைவர் அலாய்சியஸ் ஆல்பர்ட், மாணவியர் புலத்தலைவி முனைவர் ஷமீலா ஜோஸ்டர் மற்றும் தேர்தல் விழிப்புணர்வு மைய ஒருங்கிணைப்பாளர் சி.கிறிஸ்டோபர் ஆகியோர் செய்திருந்தனர்.